பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

05 04 2025 **SATURDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, இலங்கை அதிபர் திரு **Anura Kumara Dissanayake**-வுடன் இன்று கொழும்பில் பேச்சு நடத்தினார்.

2. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு நாட்டு மக்கள் அனைவரும் பங்களிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. நாட்டிலேயே அதிகமாக ஒன்பது புள்ளி ஆறு ஒன்பது சதவீத வளர்ச்சியை தமிழகம் கண்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. ரஷ்யா, யுக்ரைன் மீது நடத்திய ஏவுகணை தாக்குதலில் 9 குழந்தைகள் உட்பட 19 பேர் உயிரிழந்தனர்.

5. உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியாவின் **Sift Kaur Samra** தங்கப்பதக்கம் வென்றார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<<>>>>>**

அரசுமுறைப்பயணமாக இலங்கை சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று கொழும்புவில் அந்நாட்டு அதிபர் திரு **Anura Kumara Dissanayake**-வுடன் பேச்சு நடத்தினார்.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் விவாதித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்தாயின.

சற்றுமுன் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி, இலங்கை அதிபர், அந்நாட்டின் உயரிய விருதை தமக்கு வழங்கியதாக கூறினார்.

இது தமக்கு மட்டுமல்ல, நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைத்த பெருமை என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியா - இலங்கை இடையேயான நல்லுறவுக்கு கிடைத்த பெருமையாகும் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

**<<<<<<>>>>>**

நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா சத்தீஸ்கரில் இன்று ஆய்வு மேற்கொள்கிறார்.

ராய்பூரில் நடைபெறவுள்ள இந்த ஆய்வுக்கூட்டத்தில், உயர் அதிகாரிகள் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<>>>>>**

மத்தியில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு ஏழை மக்களின் மேம்பாட்டிற்கு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களின் நலனை கருதி மத்திய அரசு கொண்டுவரும் திட்டங்கள் மற்றும் மசோதாக்களை அரசியல் காரணங்களுக்காக எதிர்க்கட்சிகள் எதிர்ப்பதாக கூறினார்.

மத்திய அரசின் நடவடிக்கைகள் குறிப்பாக வக்ஃப் மசோதா குறித்து தவறான தகவல்கள் பரப்பப்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

வக்ஃப் மசோதா இஸ்லாமியர்கள் நலனுக்கு எதிரானது அல்ல என்றும் திரு சிராக் பாஸ்வான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

வக்ஃப் திருத்த மசோதா சரியான நோக்கத்திற்காக கொண்டுவரப்பட்டுள்ளதாக பீகார் ஆளுநர் திரு ஆரிஃப் முகமது கான் கூறியுள்ளார்.

பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உத்தரப்பிரதேசத்தில் தாம் அமைச்சராக பணியாற்றிய காலத்தில் வக்ஃப் துறையை கையாண்டதாக குறிப்பிட்டார்.

வக்ஃப் சொத்துக்கள் தொடர்பாக ஏராளமான வழக்குகள் நிலுவையில் உள்ளதாக அவர் கூறினார்

இவற்றிற்கு தீர்வுகாண்பதற்கு வக்ஃப் மசோதா உதவிடும் என்றும் திரு ஆரிஃப் முகமது கான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தில்லியில் பாதுகாப்பான குடிநீர் குடியிருப்புகளுக்கு வழங்குவது உறுதி செய்யப்படும் என்று முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் இணைவதற்கு தில்லி அரசு இன்று கையெழுத்திட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முந்தைய ஆம் ஆத்மி அரசின் செயல்பாடுகள் காரணமாக, இந்த திட்டத்தின் பலன்கள் தில்லி மக்களுக்கு கிடைக்காமல் இருந்ததாக அவர் தெரிவித்தார்.

தற்போது இந்த குறை களையப்பட்டு ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் பலன்கள் தில்லி மக்களுக்கு கிடைக்கும் என்றும் திருமதி ரேகா குப்தா கூறினார்.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதிகளின் ஊடுருவல் முயற்சியினை பாதுகாப்புப்படையினர் முறியடித்தனர்.

ஜம்மு மண்டலத்திற்கு உட்பட்ட **Ranbir Singh Pura** பகுதியில் தீவிரவாதி ஒருவர் ஊடுருவ முயன்றதாகவும், அவரை பாதுகாப்புப்படையினர் சுட்டுக்கொன்றதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனையடுத்து அந்த பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

எல்லை பாதுகாப்புப்படையினரின் கொடி அணிவகுப்பும் நடைபெற்றது.

<<<<<<>>>>>

மணிப்பூர், மிசோரம், உத்தராகண்ட், இமாச்சலப்பிரதேசங்களில் ஊரகப்பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின்கீழ், மூன்றாம் கட்டமாக இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக ஊரக வளர்ச்சித்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்படி, மணிப்பூரில் 225 கோடி ரூபாய் செலவில் 41 சாலைகள் மேம்படுத்தப்பட உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

280 கிலோமீட்டர் தொலைவிற்கு இந்த பணிகள் நடைபெறவுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிசோரத்தில் 67 கோடி ரூபாய் செலவிலும், இமாச்சலப்பிரதேசத்தில் 147 கோடி ரூபாய் செலவிலும், உத்தரகண்டில் 40 கோடி ரூபாய் செலவிலும் இந்த பணிகள் நடைபெறவுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் மசோதாவிற்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

பாஸ்போர்ட் சட்டத்திற்கு மாற்றாக இந்த சட்டம் கொண்டுவரப்பட்டது.

பாஸ்போர்ட் போக்குவரத்து ஆவணங்கள், விசா மற்றும் குடியேற்ற பதிவு போன்ற நடைமுறைகளை நவீன மயமாக்குவதற்கு இந்த சட்டம் உதவிடும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>

கடல்சார் துறையை வலுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தேசிய கடல்சார் தினத்தையொட்டி விடுத்துள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளர்ச்சியில் கடல்சார் துறை முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான மத்திய அரசு பொறுப்பேற்ற பத்தாண்டுகளில் துறைமுகங்களின் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் அவர் பட்டியலிட்டுள்ளார்.

உள்நாட்டு நீர்வழி போக்குவரத்திற்கும் மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு நாட்டு மக்கள் அனைவரும் பங்களிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று புதுதில்லியில் தேசிய கடல்சார் தின நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், இளையோர் இதில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்றார்.

உலக அளவில் வலிமையான கடல்சார் அமைப்பை கொண்ட நாடாக இந்தியா திகழ்கிறது என்றும் அவர் கூறினார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் கடல்சார் துறை முக்கிய பங்கு வகிப்பதாக திரு சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நாட்டிலேயே அதிகமாக ஒன்பது புள்ளி ஆறு ஒன்பது சதவீத வளர்ச்சியை தமிழகம் கண்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், பாலின சமத்துவம், அனைத்துப்பகுதிகளுக்கும் சமமான வளர்ச்சி உள்ளிட்டவற்றில் கவனம் செலுத்தி, இந்த சாதனையை தமிழகம் படைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

உயர் பொருளாதார இலக்கை எட்ட வேண்டும் என்ற நோக்கில், தமது அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

பஞ்சாபில் கோதுமை கொள்முதலுக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அம்மாநில உணவுத்துறை அமைச்சர் திரு **Lal Chand Kataruchak** கூறியுள்ளார்.

ஜலந்தரில் இதுதொடர்பாக, உயரதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனை தெரிவித்தார்.

ஒரு லட்சத்து 24 ஆயிரம் மெட்ரிக் டன் கோதுமையை கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கொள்முதல் செய்யப்படும் கோதுமைக்கான தொகை விவசாயிகளுக்கு 24 மணிநேரத்தில் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையாக 2 ஆயிரத்து 425 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

கோதுமை கொள்முதல் நடவடிக்கைகளுக்காக 28 ஆயிரத்து 894 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் திரு **Lal Chand Kataruchak** தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ரஷ்யா - யுக்ரைன் மீது நடத்திய ஏவுகணை தாக்குதலில் 9 குழந்தைகள் உட்பட 19 பேர் உயிரிழந்தனர். 50 பேர் காயமடைந்தனர்.

**Kryvyi – Rih** நகரில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன

இருப்பினும், ரஷ்ய அரசு ராணுவ தளங்களை குறிவைத்தே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறியுள்ளது.

இதனை நிராகரித்துள்ள யுக்ரைன் அரசு, ரஷ்யா திட்டமிட்டு இந்த தாக்குதலை நடத்தியுள்ளதாக தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

கனடாவில் நேரிட்ட கத்திக்குத்து சம்பவத்தில் இந்தியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

**Rockland** பகுதியில் இந்த சம்பவம் நேரிட்டதாகவும், இதில் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

இதனை உறுதி செய்துள்ள இந்திய தூதரகம், உயிரிழந்த இந்தியரின் குடும்பத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கி வருவதாக கூறியுள்ளது.

**<<<<<<>>>>>**

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்தே காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தில்லி, ஹரியானா ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், பஞ்சாப் மற்றும் குஜராத்தில் வரும் 9-ஆம் தேதிவரை அதிகபட்சமாக இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் அதிகரிக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளா, தமிழகம், கர்நாடகா, அஸ்ஸாம், மேகாலயா உள்ளிட்ட மாநிலங்களுக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியாவின் **Sift Kaur Samra** தங்கப்பதக்கம் வென்றார்.

அர்ஜென்டினாவின் **Buenos Aires–**ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 50 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

-------------------

உலகக்கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Abhinash Jamwal** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

-----------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் சென்னை – தில்லி அணியையும், பஞ்சாப் - ராஜஸ்தான் அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<<<>>>>>**

<u>மீண்டும் தலைப்புச் செய்திகள்</u>

1. இலங்கை அரசின் உயரிய விருது பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு இன்று வழங்கப்பட்டது.

2. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு நாட்டு மக்கள் அனைவரும் பங்களிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. நாட்டிலேயே அதிகமாக ஒன்பது புள்ளி ஆறு ஒன்பது சதவீத வளர்ச்சியை தமிழகம் கண்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. ரஷ்யா, யுக்ரைன் மீது நடத்திய ஏவுகணை தாக்குதலில் 9 குழந்தைகள் உட்பட 19 பேர் உயிரிழந்தனர்.

5. உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியாவின் **Sift Kaur Samra** தங்கப்பதக்கம் வென்றார்.

**<<<<<<END>>>>>**